# கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

## மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டி-2019

| தரம் : 11 | | நேரம்: 2.00 மணித். |
|---|---|---|

**சுட்டெண் :...............................**

**◉எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

**◉வினா இல 01 முதல் 10 வரையான வினாக்களுக்கான சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. 1762ல் ஜோன்பைபஸ் இலங்கைக்குவரும் போது கண்டி இராஜ்யத்தின் ஆட்சியாளனாகக் காணப்பட்ட மன்னன்.
   1) இராஜாதி இராஜசிங்கன் 2) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
   3) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் 4) விஜயராஜசிங்க மன்னன்

2. நிர்வாகம் மற்றும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிராந்திய அரசால் நியமிக்கப்பட்ட முதலாவது ஆளுநர்
   1) வில்லியம் J. கொஸ்ரர் 2) எட்வேட் பாண்ஸ் 3) ஜேம்ஸ் லோட்டன் 4) பிரட்றிக் நோர்த்

3. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஆசியா கண்டத்தில் கைத்தொழில் துறையில் முன்னேற்றம் கண்ட ஒரேநாடு
   1) சீனா 2) இந்தியா 3) ஜப்பான் 4) சிங்கப்பூர்

4. இலங்கையின் பராளுமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான அதிகாரத்தினைக் கொண்ட நீதிமன்ற முறைமை.
   1) மேன்முறையீட்டு நீதிமன்றம் 2) உயர் நீதிமன்றம்
   3) மேல் நீதிமன்றம் 4) நீதிவான் நீதிமன்றம்

5. இருமொழிக் கல்வி என்பதனால் கருதப்படுவது எல்லாம் மாணவர்களுக்கும்,
   1) சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைக் கற்பித்தல்
   2) தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளைக் கற்பித்தல்
   3) சிங்கம் அல்லது தமிழ் மொழியுடன் ஆங்கில மொழியினைக் கற்பித்தல்
   4) தெரிவு செய்யப்பட்ட பாடங்களை தாய் மொழியிலும் வேறு மொழியிலும் கற்பித்தல்

6. சம உயரக் கோடுகள் மிகவும் நெருக்கமாக அமைந்து ஒன்றின் மீது இன்னொன்று தொடும் அளவுக்கு அமைந்திருந்தால் அது
   1) குழிவுச்சாய்வு 2) குத்துச்சாய்வு 3) குவிவுச்சாய்வு 4) ஓங்கல்சாய்வு

7. ஐக்கியநாடுகள் சபையினால் 1948 டிசம்பர் 10ஆம் திகதி மனித உரிமைகள் தொடர்புகள் வெளியிடப்பட்ட சர்வதேசப் பிரகடனத்தில் சரத்து 27 தொடக்கம் 30 வரையான உறுப்புரை குறிப்பது
   1) மனித உரிமைகளின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.
   2) மனித உரிமைகளின் இயல்பை வலியுறுத்துகின்றது.
   3) பல்வேறு உரிமைகளையும் அட்டவணைப் படுத்தியுள்ளது.
   4) பல்வேறு உரிமைகள் தொடர்பான கடமைகளை குறிப்பிடுகின்றது

8. இரத்மலானை பரமதம்ம தேசிய பிரிவேன, பேலியகொட வித்தியாலங்கார பிரிவேனா என்பவற்றை அமைத்த தேரர்கள் முறையே,
   1) சுமனதிஸ்ஸ தேரர், வலானை சித்தார்த்த தேரர்
   2) வலானை சித்தார்த்த தேரர், தர்மாலோக தேரர்
   3) கிக்கடுவை ஸ்ரீ சுமங்கல தேரர், தர்மாலோக தேரர்
   4) மிதெட்டுவத்த குணானந்த தேரர், ஸ்ரீ சுமணதிஸ்ஸ தேரர்

சுட்டெண் :........................................

9. சனத்தொகைப் பரம்பல் மீது செல்வாக்குச் செலுத்தும் பௌதிக காரணிகளாகக் கொள்ள முடியாத விடயம்,
   1) தரைத்தோற்றம்
   2) காலநிலை
   3) பொருளாதார அமைப்பு
   4) நீர்வடிகாலமைப்பு

10. இலங்கையில் பாடசாலைப் புத்தகங்களை அச்சிட்டு இலவசமாக வழங்கப்படுவது,
   1) கல்வி அமைச்சு மூலமாகும்
   2) தேசிய கல்வி நிறுவனத்தின் மூலமாகும்
   3) அரசகரும மொழிகள் திணைக்களத்தினாலாகும்
   4) கல்வி வெளியிட்டுத் திணைக்களத்தினாலாகும்

(1 x10 =10 புள்ளிகள்)

⦿ 11 தொடக்கம் 15 வரையிலான வினாக்களுக்கான பொருத்தமான விடையினை இடைவெளிகளில் எழுதுக.

11. இலங்கையின் பிரதான சட்ட அலுவலரான சட்டமா அதிபர் .......................................................... இனால் நியமிக்கப்படுவார்.

12. 1873ல் மாளிகாகந்த வித்தியோதய பிரிவேனாவை ............................................................. தோற்றுவித்தார்.

13. இலங்கையில் 59 வயதிற்கு மேற்பட்ட தங்கியிருப்போர் எண்ணிக்கை அதிகரித்தல் சனத்தொகை ................................................................. எனப்படும்.

14. இலங்கையில் சூரியவலு மூலமாக மின் உற்பத்தி பூங்கா வேலைத்திட்டம் ................................... மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

15. பராக்கிரமபாகு சமுத்திரத்தைப் போன்று 06 மடங்கு பரப்பளவைக் கொண்ட மொறகஹந்த நீர்ப்பாசனத் திட்டத்திற்கு ...................................................... உதவி வழங்கியுள்ளது.

(5X2=10 புள்ளிகள்)

⦿ 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

16. 2018ல் உலகில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற மற்றும் ஆபத்தான முதல் நாடுகளின் பட்டியலில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

.......................................................................................................................................

17. இலங்கையின் தற்போதைய பாராளுமன்றக் கட்டிடத்தை வடிவமைத்தவர் யார்?

.......................................................................................................................................

18. ரத்தம்பே, ரந்தனிகல நீர்மின்சக்தி நிலையங்கள் எந் நதியினை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது?

.......................................................................................................................................

19. ஜேம்ஸ் டெய்லர் என்பவரால் முதன் முதலில் தேயிலைச் செய்கை எங்கே மேற்கொள்ளப்பட்டது?

.......................................................................................................................................

20. 1848 ஆம் ஆண்டு போராட்டத்தின் பிரதான மத்திய நிலையமாக திகழ்ந்த பிரதேசம் எது?

.......................................................................................................................................

(5X2=10 புள்ளிகள்)

சுட்டெண் :....................……………

⦿ 21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருக்களைப் பயன்படுத்தி விடை தருக.

21. 

1. இப்படத்தில் காட்டப்படும் இலங்கையின் காட்டுத் தொகுதியின் பெயரினைக் குறிப்பிடுக?

……………………………………………………………………

2. இக் காடுகளை இலங்கையின் எப் பிரதேசங்களில் அவதானிக்க முடியும்?

……………………………………………………………………

22. 

1. அருகே காட்டப்பட்டுள்ள அமைப்பினைப் பெயரிடுக?

……………………………………………………………………

2. இவ் அமைப்பின் தலைவர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?

……………………………………………………………………

23. 

1. அருகே காட்டப்பட்டுள்ள படத்தில் காணப்படும் ஆட்சியாளரின் பெயர் யாது?

……………………………………………………………………

2. இவர் தமது நாட்டினை விட்டு எந்நாட்டிற்கு தப்பி ஓடினார்?

……………………………………………………………………

24. 

1. இப்படத்தில் காணப்படும் நபரின் பெயரினைக் குறிப்பிடுக?

……………………………………………………………………

2. இவரால் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்ட கட்சியினைப் பெயரிடுக?

……………………………………………………………………

25. 

1. அருகே காட்டப்பட்டுள்ள சாதனத்தினை கண்டு பிடித்தவரின் பெயரினைக் குறிப்பிடுக?

……………………………………………………………………

2. இக் கண்டுபிடிப்பு எக்கைத்தொழில் விருத்திக்கு பங்களிப்பு செய்தது?

……………………………………………………………………

(5X2=10 புள்ளிகள்)

சுட்டெண் :....................…………

⦿ 26 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு ‘அ’ மற்றும் ‘ஆ’ நிகழ்வுகளில் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் பொருத்தப்பாட்டிற்கு அமைய சரியான எழுத்தை தொடர்புபடுத்தி பொருத்தமான விடையினை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

26. அ — ஆ

1. கி.பி 1795 — A - இலங்கையில் கரையோரப் பிரதேசம் முடிக்குரிய குடியேற்ற நாடக்கப்பட்டமை
2. கி.பி 1796 — B - இலங்கையின் முதலாவது சுதந்திரப் போராட்டம்
3. கி.பி 1800 — C - பிரான்ஸ் ஒல்லாந்தை ஆக்கிரமித்தமை.
4. கி.பி 1818 — D - மெக்டோவல் தலைமையில் கண்டிக்கு தூதுக்குழு அனுப்பப்பட்டமை.
E - கொழும்பு, காலிகோட்டைகள் ஆங்கிலேயர் வசமானமை

1) DACE 2) BACE 3) EABC 4) CEDB

27. அ — ஆ

1. செங்கபிலமண் — A - ஈரவலயம்
2. செங்கபில செம்பூரான்மண் — B - ஈரவலயம், வரண்ட வலயம்
3. செம்மஞ்சள் பொட்சோல் மண் — C - தாழ்நில உலர்வலயம்
4. வண்டல் மண் — D - வரண்ட வலயம்
E - தாழ்நில ஈரவலயம்

1) DAEB 2) CABE 3) DAEC 4) BCAE

28. அ — ஆ

1. ஓம்புட்ஸ்மன் பதவி அறிமுகம் — A - சோல்பரியாப்பு
2. இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் — B - டொனமூர் யாப்பு
3. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை அறிமுகம் — C – 1978, 2ஆம் குடியரசு யாப்பு
4. ஆளுனர் நாயகம் பதவி நீக்கப்பட்டு ஜனாதிபதி பதவி அறிமுகம் — D - 1972 ஆம் முதலாம் குடியரசு யாப்பு
E - மனிங் யாப்பு

1) CABE 2) CABD 3) DABE 4) BCAE

29. அ — ஆ

1. ரிச்சட் ஆக்ரைட் — A - பாதுகாப்பான விளக்கு
2. ரொபட் புல்மன் — B - ஜெனி எனப்படும் நூல் நூற்க்கும் இயந்திரம்
3. ஹம்பிரிடேவி — C - மியூல் இயந்திரம்
4. ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ் — D - நீர் வலுவினால் இயங்கும் சிறப்பான தொரு நூல் நூற்கும் இயந்திரம்
E - புகைப்படகு

1) DEAC 2) CABE 3) DEAB 4) BDEA

30. அ — ஆ

1. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி — A - கலாநிதி.என்.எம்.பெரேரா
2. இலங்கையின் முதலாவது பிரதமர் — B - S.W.R.D..பண்டாரநாயக்கா
3. இலங்கையின் முதலாவது எதிர்க்கட்சி தலைவர் — C - டீ.எஸ்.சேனனாயக்க
4. இலங்கையின் முதலாவது சபாநாயக்கர் — D - சேர்.பிரான்சிஸ் மொலரே
D - ஈ.எச்.ஈ.வில்லியம் கோபல்லாவ

1) ECAD 2) DCAB 3) EBDC 4) CBAE

(5X2=10 புள்ளிகள்)

சுட்டெண் :...................…………

◉ இலக்கம் 31 - 35 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

31. 1. ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டமைக்கான பிரதான காரணி யாது?

…………………………………………………………………………………………………

2. பிரித்தானியாவில் பெருமளவிலான நிலக்கரிப்படிவுகள் காணப்பட்ட இரு பிரதேசங்களைக் குறிப்பிடுக?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

3. 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா தவிர்ந்த ஏனைய நாடுகளில் கைத்தொழில் புரட்சி பரவல் அடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் மூன்றைக் குறிப்பிடுக?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(1+2+3=06 புள்ளிகள்)

32. 1. ''சட்டம் என்பது அரசினால் செயற்படுத்தப்படும் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான ஒரு தொகுதியாகும்'' எனும் வரைவிலக்கணத்தை முன்வைத்தவர் யார்?

…………………………………………………………………………………………………

2. சட்டம் செயற்படுத்தப்படும் முறையைக் கொண்டு அது எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

3. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மூன்றைக் குறிப்பிடுக?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(1+2+3=06 புள்ளிகள்)

33. 1. இலங்கையின் உள்ளூராட்சிமன்ற தேர்தல் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடாத்தப்படும்?

…………………………………………………………………………………………………

2. இலங்கையின் உள்ளூராட்சிமன்ற வகைகள் இரண்டைக் குறிப்பிடுக?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

3. இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மூன்று தலைப்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை எவை?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(1+2+3=06 புள்ளிகள்)

சுட்டெண் :......................................

34. 1. இயற்கை வளங்களில் முக்கிய இடத்தினை வகிப்பது யாது?

..........................................................................................................................

2. உலகில் காரியத்தை உற்பத்தி செய்யும் ஆசிய நாடுகளில் இரண்டைக் குறிப்பிடுக?

..........................................................................................................................

..........................................................................................................................

3. கனிய வளங்களின் மூன்று வகையையும் பெயரிடுக?

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(1+2+3=06 புள்ளிகள்)

35. 1. இலங்கையின் கடும் பாதுகாப்பிற்கு உட்பட்ட இயற்கை ஒதுக்குப் பிரதேசங்களில் ஒன்றினைக் குறிப்பிடுக?

..........................................................................................................................

2. இலங்கையின் நிலக்கரிவலுவினைப் பயன்படுத்தி செயற்படுத்தப்படும் வெப்ப மின்சக்தி நிலையங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

..........................................................................................................................

..........................................................................................................................

3. வலுச்சக்தி வளங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(1+2+3=06 புள்ளிகள்)

⦿ 36 - 45 வரை தரப்பட்டுள்ள இடங்களை இலங்கையின் புற உருவப்படத்தில் குறித்து பெயரிடுக?

36. நல்லூர்
37. வில்பத்து
38. கண்டி
39. களனிதிஸ்ஸ
40. கோகர்ண
41. ஹம்பாந்தோட்டை
42. ஹெரவலப்பிட்டிய
43. தெதுருஓயா
44. கம்பளை
45. சிகிரியா

(10X02=20 புள்ளிகள்)